Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.83/2017

**Depositions of PW- 3**

| Name | திரு. மகேந்திரன் | Occupation | SETC Ticket Booking |
|---|---|---|---|
| Father's name | முருகேசன் | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.

18.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் SETC ல் Ticket Booking வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். இவ்வழக்கின் எதிரி மணிகண்டனை எனக்கு தெரியாது. அவரை நேரில் பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. கடந்த 2012 ம் வருடம் வராக கருடா குரூப் என்ற நிறுவனத்தில் அசா.1 சீட்டு போட்டிருந்தார். நானும் அதில் சீட்டு போட்டிருந்தேன் ஆனால் நான் அசா.1 யிடம் தான் 3 சீட்டுகளுக்காக பணம் கொடுத்து வந்தேன். பின்னர் 2015 ம் வருடம் பத்திர செலவிற்காக 11 ஆயிரம் ரூபாய் கட்ட சொன்னார்கள். நான் அவ்வாறு பணம் கட்டிவந்தேன். ஆனால் அதன் பின்னர் மேற்படி நிறுவனத்தில் உள்ளவர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை என்று தெரிவித்து அசா.1 என்னிடம் பெற்ற தொகையை கொஞ்சம் கொஞ்சமாக திருப்பி கொடுத்தார். அதன் பின்னர் நான் அவரை தொடர்பு கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.83/2017

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ராமச்சந்திரன் | Occupation | பணி ஓய்வு |
| Father's name | முத்துச்சாமி | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.

18.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். இவ்வழக்கின் எதிரி மணிகண்டனை எனக்கு தெரியாது. அவரை நேரில் பார்த்தாலும் அவரை அடையாளம் காட்ட முடியாது. அசா.1 யிடம் சீட்டு கட்டுவதற்காக நாங்கள் பணத்தை கொடுத்திருந்தோம். ஆனால் அந்த சீட்டு நிறுவனத்தில் நேரடியாக சென்று பார்த்தபோது அந்த நிறுவனம் பூட்டப்பட்டிருந்தது. அதனால் அசா.1 எங்களிடம் நாங்கள் சீட்டு கட்டிய தொகையை திரும்ப கொடுத்துவிட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை—

திருவில்லிபுத்தூர் சன்னதி தெருவில் ஸ்ரீவராக கருட சக்கரா என்ற பெயரில் இவ்வழக்கின் எதிரி ரியல் எஸ்டேட் நடத்தி வந்ததாகவும் பொதுமக்களிடம்

மாதத்தவணையாக பணம் வசூலித்து பிளாட் தருவதாக கூறி பணம் வசூல் செய்ததாகவும் நானும் மற்றவர்களும் மேற்படி திட்டத்தில் சேர்ந்து ஒரு பிளாட்டுக்கு மாதம் ரூ.290/- வீதம் 46 மாதங்கள் கட்டிவந்தேன் என்றும் அதனால் மேற்படி பிளாட்டிற்கு பத்திரபதிவு செய்வதற்காக ரூ.5500/- செலுத்தியதாகவும் ஆனால் பத்திரப்பதிவு செய்து தரவில்லை என்றும் அதுபற்றி நானும் மற்ற நபர்களும் பலமுறை இவ்வழக்கின் எதிரியிடம் கேட்டபோது அவர் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் தரக்குறைவாக பேசி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அதனால் மேற்படி சங்கதிகள் சம்மந்தமாக அசா.1 திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் புகார் மனுகொடுத்ததாகவும அதில் நடவடிக்கை எடுக்காததால் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அதன் அடிப்படையில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.83/2017

**Depositions of PW- 5**

| Name | திரு. ராஜசுதாகர் | Occupation | கால்நடை ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | பாலகிருஷ்ணன் | Calling | |
| Village | ராஜபாளையம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of June 2026.

18.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கால்நடை ஆய்வாளராக வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும். இதற்கு முன்பு 2010 ம் வருடம் நான் சீட்டு போட்டிருந்தேன். அதனை அசா.1 என்னிடம் பெற்று அந்த நிறுவனத்தில் கட்டிவந்தார். பின்னர் அந்த நிறுவனத்தை மூடிவிட்டதாக எனன்னிடம் கூறினார். அது தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை—

திருவில்லிபுத்தூர் சன்னதி தெருவில் ஸ்ரீவராக கருட சக்கரா என்ற பெயரில் இவ்வழக்கின் எதிரி ரியல் எஸ்டேட் நடத்தி வந்ததாகவும் பொதுமக்களிடம் மாதத்தவணையாக பணம் வசூலித்து பிளாட் தருவதாக கூறி பணம் வசூல் செய்ததாகவும் நானும் மற்றவர்களும் மேற்படி திட்டத்தில் சேர்ந்து நான் இரண்டு

பிளாட்டுகளுக்கு மாதம் ரூ.290/– வீதம் 46 மாதங்கள் கட்டிவந்தேன் என்றும் அதனால் மேற்படி இரண்டு பிளாட்டிற்கும் பத்திரபதிவு செய்வதற்காக ரூ.11000/– செலுத்தியதாகவும் ஆனால் பத்திரப்பதிவு செய்து தரவில்லை என்றும் அதுபற்றி நானும் மற்ற நபர்களும் பலமுறை இவ்வழக்கின் எதிரியிடம் கேட்டபோது அவர் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் தரக்குறைவாக பேசி கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அதனால் மேற்படி சங்கதிகள் சம்மந்தமாக அசா.1 திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் புகார் மனுகொடுத்ததாகவும அதில் நடவடிக்கை எடுக்காததால் இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அதன் அடிப்படையில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.